BASEL LANDSCHAFT
KANTONALER KRISENSTAB

மானில இடர்கால குழு Oristalstrasse 100, 4410 Liestal

பெற்றோர் மற்றும் பாதுகாவலர்க்கு

Liestal, 10. Februar 2021

**«COVID- 19 பாடசாலை சோதனை வரிசைக்கிரமம் «பாசல்லான்ட் மானிலத்தில் பரந்த அளவில் சோதனை “**

மேன்மை தங்கிய பெற்றோர் மற்றும் பாதுகாவலர்களுக்கு,

கொரோனா உலகளாவிய பரவல் தொடர்கிறது. பாடசாலைகளில் மாணவர்கள் தொடர்ச்சியாக குழுக்களாக ஒன்றுசேருவதால் துரதிஸ்டவசமாக அங்கும் வைரசுக்களின் தாக்கத்தையும் அதன் பரவலையும் தவிர்க்க முடியாதுள்ளது. கொரோனா தாக்கத்தின் காரணமாக முழுப்பாடசாலையும் மூடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மாணவ மாணவியர், அவர்களது குடும்பத்தினர், ஆசிரியர்கள் தனிமைப்படுத்தலுக்கு தள்ளப்பட்டுள்ளார்கள்.

வைரசுக்களின் பரவல் நோய்அறிகுறி தென்படாதவர்களிடமும் இருந்துகூட பரவுவதாக அறிவியல் ஆய்வுகள் கூறுகின்றன. மேலும் அண்மைக்காலங்களில் உருமாறிய COVID 19 வைரசுக்கள் பாசல்லான்ட் மானிலத்திலும் உறுதிசெய்யப்பட்டுள்ளன. நோய் தொற்றியவர்கள் இனங்காணப்பட்டு தனிமைப்படுத்தப்படும் வகையில் பரந்த அளவில் சோதனைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

பெப்ரவரி மாத ஆரம்பத்திலேயே பாசல்லான்ட் மானிலம் «பாசல்லான்ட் மானிலத்தில் பரந்த அளவில் சோதனை “ எனும் ஒரு நிகழ்வினை குறிப்பிட்ட பாடசாலைகளில் ஆரம்பித்துள்ளது. இப்போது இம் முறையான சோதனைத்தொடர் மானில அளவில் எல்லாப் பாடசாலைகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

«பாசல்லான்ட் மானிலத்தில் பரந்த அளவில் சோதனை “ எனும் இந் நிகழ்வில் மாணவ மாணவியரும் ஆசிரியர்களும் வாரம் ஒருமுறை கிரமமாக சோதிக்கப்படுவார்கள். இந்நிகழ்வில் பங்கெடுப்பது முற்றுமுழுதாக சுயவிருப்பின் அடிப்படையிலேயே ஆகும். உங்கள் குழந்தை இந்நிகழ்வில் பங்குகொள்ளாவிடினும் எவ்வித விளைவுகளும் பாடசாலையில் ஏற்படாது.

இச் சோதனைநிகழ்வு உமிழ்நீர்மாதிரி ஒன்றினை பெறுவதன் மூலம் நிறைவேற்றப்படும் (மூக்கு மற்றும் தொணடைக்குழியில் சுரண்டி எடுப்பது அல்ல). ஆதலால் வேதனையின்றி எடுக்கப்படும். குழந்தை சமையல்உப்புக் கலவையொன்றை (0.9% NaCl) கொப்பளித்து ஒரு குழாயில் உமிழவேண்டும்.

இச் சோதனை வகுப்புநேரங்களில் வாரம் ஒருமுறை முழுமையான அனாமதேய முறையில் இடம்பெறும். இதில் உமிழப்படும் குழாய் ஒரு வகுப்புக்கு ஒன்றாகும் (கூட்டுச்சோதனை). அச் சோதனைக்குழாயில் பாடசாலையின் பெயரும் ஒரு தொடர் இலக்கமும் மட்டுமே எழுதப்படும். ஆகையால் ஒரு தனிப்பட்ட குழந்தையின் தரவுகள் எந்தவிதத்திலும் பரிசோதனையில் இடம்பெறாது.

எடுக்கப்பட்ட கூட்டுமாதிரிகள் PCR பகுப்பாய்வு மூலம் பரிசோதிக்கப்படுகிறது. இவை உயர் உணர்திறன் கொண்டவை. இக் கூட்டுமாதிகள் பரிசோதனைக்கூடத்துக்கு வந்து 6 தொடக்கம் 10 மணித்தியாலங்களின் பின்னர் மதிப்பீடு செய்யப்படுகிறது. அதன் பின்னர் பெறுபேறுகள் மின்னஞ்சல் மூலமாக பாடசாலைக்கு அறிவிக்கப்படும். வகுப்பாசிரியர் மூலமாக இப்பெறுபேறுகள் உங்களுக்கு அறியத்தரப்படும். நேர்மறையான (positiv) பெறுபேறாக இருப்பின் சம்மந்தப்பட்ட குழந்தைகளும் ஆசிரியர்களும் அதே நாள் அல்லது அதற்கடுத்த நாள் தனியான சோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள். இந்த இரண்டாவது சோதனை கட்டாயமாக செய்யப்பட வேண்டும். இது முத்தன்ஸ் இல் உள்ள சோதனைக்கூடத்திலோ அல்லது வெளிச்சோதனைச் சாவடியிலோ இடம்பெறும். அவ்வாறாயின் வழமையான நோயாளிகள்பதிவேட்டில் பதியப்படுவது தவிர்க்கமுடியாதது.

இந்த நிகழ்வில் நீங்கள் பங்கெடுப்பதால் உங்களுக்க எந்த செலவும் ஏற்படாது. இந்தப் பரிசோதனைக்கு நீங்கள் இணங்குவீர்கள் ஆயின் நாங்கள் மிகவும் சந்தோசமடைவோம். இக் கொரோனா உலகளாவிய பரவலை சமாளிப்பதற்கு உங்களினது ஆதரவையும் நாடிநிற்கிறோம்.

இது சம்மந்தமாக உங்களுக்கு மேலதிக விளக்கங்கள் தேவைப்பட்டால் உங்கள் குழந்தையின் வகுப்பாசியரை நாடுங்கள்.